உறுதி கூறுவீர்—உதவி பெறுவீர்!

காங்கிரசை முறியடிக்க கம்யூனிஸ்டுகளுக்கு தி. மு. க. அழைப்பு

நேசக்கரம் நீட்டப்படுகிறது—நேர்மை வேண்டப்படுகிறது

பொதுச் செயலாளர் சி. என். ஏ. அறிக்கை

தேர்தல் அலை ஓசை நாடெங்கும் வீசிக்கொண்டிருக்கிறது. பொது மக்களும், பொது மக்களுடன் இடையறாத் தொடர்பு கொண்டு பணியாற்றிவரும் கட்சிகளும், பல்வேறு பிரச்சினைகளையும் தற்காலிகமாக ஒதுக்கிவைத்துவிட்டு, தேர்தலைப்பற்றிக் கவனிக்க வேண்டிய அளவில். தேர்தல் அலை ஓசை வலுவாகிவிட்டது. பல்வேறு பிரச்சினைகளுக்கும்பரிகாரம் இந்தத் தேர்தல் மூலம் கிடைத்துவிடும் என்று நம்பப்படுகிறது. பல கட்சிகள், பாசிச ஒழிப்பு, எதேச்சாதிகார ஒழிப்பு, லஞ்ச ஒழிப்பு, கள்ளமார்க்கட் ஒழிப்பு. முதலாளித்துவ ஒழிப்பு, போன்ற பலவும், இந்தத் தேர்தல் மூலமாகவே சாத்தியமாகிவிடும் என்றுபிரச்சாரம்செய்வதால், பொதுமக்கள் ஆற[illegible] பெறும் அவலநிலை மாறாதா, அக்கிரமமுறையிலே போகும் ஆளவந்தார்களின் பிடியிலிருந்து விடுபடமாட்டோமா, பெற்ற சுதந்திரத்தைக் கள்ளமார்க்கட் கழுகுகள் கொத்தித்தின்று கொழுக்கும் கொடுமை ஒழியாதா, என்ற ஆவல் மிகுதிகொண்டுள்ளனர்—எனவே, இந்தத் தேர்தல் பிரச்சினையிலே தீவிரமான கவனம் செலுத்துகின்றனர்.

உண்மையிலேயே இந்தத் தேர்தல், முக்கியமானதுதான். இதற்கு முன்பு என்றும் இல்லாத அளவுக்கு 'வாக்காளர்'கள் உள்ளனர்—அதுமட்டுமா? — இதற்கு முன்பு நாம் கேள்விப்படாத பெயர்கள் சூட்டிக் கொண்டு பலப்பல, புதுப்புது, கட்சிகள் கிளம்பியுள்ளன. எனக்கு ஓட் அளித்தால் இந்திரலோகம்! எனக்கு வாக்களித்தால் இணையில்லா இன்பம் — என்று பேசப்படுகிறது—பேசப்படுகிறதா, முழக்கமிடப்படுகிறது!! எப்படி, என்ன திட்டம், என்று கேட்கப் பொதுமக்களுக்கு நேரம் இல்லை! சொல்பவர்கள் யார், அவர்களின் முன்னாள் நிலை என்ன, ஆராய அவகாசம் இல்லை! எனவே, மேலும் மேலும் நல்வாக்குகள் பொதுமக்கள் முன்வந்து குவிகின்றன.

பல்வேறு கட்சிகள் பொதுமக்களிடம் தாராளமாக அணுகவும், தனித்தனியே திட்டங்களைக் கூறவும், உரிமையுடன் ஓட்டுகளைக்கேட்கவும், கட்சி ஏராளமாக இல்லாவிடினும் பொதுமக்கள் முன் மார்தட்டி நின்று எனக்கு ஓட் அளித்தால் இவ்வளவு செய்வேன், என்று கூறுவதற்கும் தைரியம் பிறந்ததற்குக் காரணம், இன்று உள்ள காங்கிரஸ் ஆட்சியின் அலங்கோலம் என்பதை மறுக்க முடியாது. பொதுமக்களின் வெறுப்பைப் பெற்றுவிட்டது, காங்கிரசாட்சி — இது வெளிப்படையாகவே தெரிகிறது. எனவேதான், யாரும் ஒரு கட்சி அமைத்துக்கொண்டு தேர்தல் அரங்கில் செல்லவும், கட்சிகூட வேண்டாம், "நான்" என்று கூறிக்கொண்டே கிளம்பவும், பலராலும் முடிகிறது. தேர்தலில் ஈடுபட முன்வந்துள்ள கட்சிகளின் எண்ணிக்கையையும், தனி நபர்களின் எண்ணிக்கையையும் பார்க்கும் போது, முதலில், திகைப்புதான் ஏற்படும்—ஒருகணம் யோசித்தால், இவ்வளவு எதிர்ப்புகளைக் காங்கிரசாட்சி உண்டாக்கிக் கொண்டது, என்ற உண்மையும் புலப்படும். நாடு, யாராவது ஆட்சிக்கு வந்து அமரட்டும், நாட்டினை நாசப்பாதையிலே தள்ளிவிட்ட காங்கிரசாட்சி தொலையட்டும், என்று கூறுவதைத்தான் இந்த நிலை காட்டுகிறது.

காங்கிரசாட்சியின் மீது ஏற்பட்டுள்ள எதிர்ப்பு உணர்ச்சியை, இந்த நிலை காட்டுகிறது — அதேபோது ஜனநாயகம், சரியான, முறையான, பலன்தரத் தக்க விதமான, உருவம் எடுக்கவில்லை என்பதையும் காட்டுகிறது. பல்வேறு கட்சிகளும், தேர்தல் காலக் கட்சிகளும் கிளம்புவதன் காரணம், 'எதிர்க்கட்சிகள்' இவையிவை மட்டுமே என்று பொதுமக்கள் எண்ணும்படியான, ஜனநாயகச் சூழ்நிலை ஏற்படாததுதான். இதை எண்ணும்போதுதான் பொதுமக்களின் கோபத்தைக் கண்டு திகிலடைந்துள்ள காங்கிரஸ், உள்ளூரச் சிரிக்கிறது—பாரதிதாசன் வேறோர் பிரச்சினைக்குக் கூறியதைப் போல, வாழ்கின்றார் நாலரை கோடிபேர் என்றால் வளர்கின்ற கட்சியும் அந்தத் தொகை இருக்கும்—அவர்கள் ஒன்றுபடுவதெங்கே—நம்மை ஒழித்துக்கட்டுவதெங்கே, என்று கூறிக் கொள்கின்றனர். இந்த நிலைமையை காங்கிரசார் பெரிதும் நம்பிக்கொண்டிருக்கிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம், பொதுமக்களிடம், மற்ற எந்தக் கட்சியும் கொண்டுள்ள தொடர்பை விட அதிகமான அளவு கொண்டிருக்கிறது, என்பதை, அரசியல் அப்பாவிகளும், அரசியலில் உள்ள பொச்சரிப்புக்காரர்களும் நச்சு நினைப்பினரும் தவிர, மற்றையோர் அனைவரும் அறிவர்.

அடுக்கு மொழி பேசி மயக்குகிறார்கள்—பாடி மயக்குகிறார்கள்—கூத்தாடி கூட்டம் சேர்க்கிறார்கள்—என்றெல்லாம், கோபமாகப் பேசுவோர் பேச்சிலிருந்தே, தி. மு. கழகம் பொதுமக்களிடம் மிகப் பெரிய அளவிலே தொடர்பு கொண்டிருக்கிறது என்பது விளக்கமாகிறது. உண்மையை அறிய வேண்டும் என்பதற்காக வேனும், உள்ளத்தில் ஏற்படக் கூடிய எரிச்சலை ஓரளவுக்காவது அடக்கிக் கொள்வார்களானால், பொச்சரிப்புக்காரர்களுக்கும் கூறுவோம், கடந்த இரண்டாண்டுக் காலத்திலே அதிகமான அளவு, பொதுக்கூட்டங்கள், மாநாடுகள், கலை நிகழ்ச்சிகள், நடாத்தியதும், இதுவரையில் அரசியல் கருத்தலை புகாதிருந்த பட்டிதொட்டிகளிலும், அரசியல் இயக்கத்தின் விதையைத் தூவியதும், கடமை உணர்ச்சியுடன் காரியமாற்றும் திறமைசாலிகளை அலுவலர்களாகப் பெற்ற 600-க்கு மேற்பட்ட கிளைக்கழகங்களை அமைத்துள்ளதும், இத்தகு பணியாற்றும காலையில், ஏற்பட்ட அடக்கு முறைகளை, தடியடியில் துவங்கி துப்பாக்கிப் பிரயோகம் வரையில் தாங்கிக் கொண்டதும், தி. மு. கழகம்தான் என்பதை உணரவேண்டும். எனவே இன்றைய ஆட்சியின்மீது பொதுவாகவே பொது மக்களுக்கு வெறுப்புணர்ச்சி வேகமாகப் பரவி இருக்கிறது என்றால், இந்தச் சூழ்நிலையை உருவாக்கும் பெரு முயற்சியிலே பெரும்பங்கு தி. மு. க. வைச் சார்ந்தது என்பதை நேர்மையாளர் எவரும் மறுத்திட முன்வாரார்—மற்றையோரின் போக்குக்கு மாற்று மருந்து நம்மிடம் இல்லை.

சாதாரணமாக, ஜனநாயக முறைப்படி கவனிக்கும்போது, காங்கிரசாட்சியின் கேடுகளை அவ்வப்போது மக்களிடம் எடுத்துரைத்து விழிப்புணர்ச்சியை உண்டாக்கியதும், மக்களைத் திரட்டி, பொதுப் பிரச்சினைகளை விளக்கிக் காட்டியதும், கொடுங்கோன்மையை எதிர்க்கும் உள்ள உரம் படைத்த முன்னணியை அமைத்ததும், இவ்வளவுக்கும் அரசியலில் சோரம் போகாமல், பணக்காரனிடம் பல்லிளிக்காமல், 'பவுடர் பூசி பாடி ஆடி' வருகிறார்கள் என்ற கேலி கேட்டு சலிப்புறாமல், பணியாற்றி வந்ததும், தி. மு. க. என்பதை அனைவரும் அறிவர்—சிலர் மறப்பர், சொந்த ஆசாபாசங்களுக்கு ஆட்பட்டு.

எனவே, தி. மு கழகமே தேர்தல் அரங்கிலே நின்று, காங்கிரஸ் கட்சியை எதிர்க்கும் உரிமை பெற்றது என்பதை எவரும் மறுக்க இயலாது. மற்ற கட்சிகளுக்கு உள்ளதைவிட, இந்த உரிமை, தி. மு. கழகத்துக்கு, அதிகம் என்பது பற்றியும், வாதங்கள் தேவையில்லை. மற்றக் கட்சிகளுக்கு இருப்பதைவிட, தேர்தலில் வெற்றி பெறும் வாய்ப்பு, தி. மு. கழகத்துக்கு அதிகம் என்பது பற்றியும் விரிவுரை தேவையில்லை. "இவ்வளவு மும்முரமான பிரச்சாரமும் எதற்கு? தேர்தலிலே நிற்பதற்குத்தான்!" என்று காங்கிரஸ் தலைவர்கள் அடிக்கடி கூறி வந்ததையும், "தனியாகக் கழகம் ஏன்? தணியாத தேர்தல் மோகம்தான்" என்று 'இருந்த இடம்' கூறிவந்ததையும், ஆதாரங்களாகக் கொண்டாலே போதும், தேர்தல் அரங்கில் நுழையவும், வெற்றி பலப்பல பெறவும், மற்ற யாரையும்விட, தி. மு. க. வுக்கு, உரிமையும் வாய்ப்பும் மிக மிக அதிகம் என்பது விளங்கும்.

எனினும், தி. மு. கழகம் போட்டியிடப் போவதில்லை.

தேர்தல் என்ற சொல் கிளம்பிய பிறகு கிளம்பிய கட்சிகளெல்லாம் மார் தட்டுகின்றன—இடைவிடாத தொடர்பு கொண்டு, பொது மக்களிடம் காங்கிரசாட்சியின் போக்கைக் கண்டித்துப் பலமான பிரச்சாரம் செய்துவந்த, தி. மு. க. தேர்தலில் கலந்து கொள்ளப் போவதில்லை.

தான் நிற்கும் தொகுதி அளவுக்காவது, தனக்குத் தொடர்பு உண்டா, என்பது புரியாத பிரச்சினையாக இருக்கும் நிலையிலேயும் பலர் முன் வருகிறார்கள்-மாவட்டம், வட்டம், பேரூர், சிற்றூர், பட்டிதொட்டி எங்கும் கிளைகள் தழைத்துள்ள, நிலைபெற்ற, தி. மு. க. தேர்தலில் ஈடுபடவில்லை.

இந்தத் தொகுதிக்கா, அந்தத் தொகுதிக்கா, என்பதைக் கூடப் பிறகு நிர்ணயித்துக் கொள்ளலாம், இரண்டுக்கும் 'ஸ்லிப்' போடு, என்று பேசிடும் போக்கினர் கூட, தேர்தலுக்கு நிற்கிறார்கள்—தி. மு. க. நிற்கவில்லை. ஏன்?

பொது மக்களில் பலரும், காங்கிரசாரில் பெரும்பாலரும், ஏனைய கட்சிகளிலே சிலரும், தி. மு. கழகத்திலேயே மிக மிகச் சிலரும், ஏன்? என்றுதான் கேட்கின்றனர்.

யாருக்கும் தோன்றக் கூடியதுதான், இந்தக் கேள்வி.

இயற்கையாகவும் கிளம்பக் கூடியது தான், இந்தக் கேள்வி.

இந்தக் கேள்விக்கு முடிவான பதிலை, இந்தத் திங்கள் மதுரையிலே நடைபெற்ற, தி. மு. கழக பொதுக்குழு, அளித்துவிட்டது. பலமணி நேர விவாதம்—பலமான கருத்து அலை வீச்சுக்கள்—சூழ்நிலை விளக்கங்கள்—இவைகளுக்குப் பிறகு, ஒருமனதான முடிவு, தேர்தலில் நாம் அபேட்சகர்களை நிறுத்திக் கலந்து கொள்ளப் போவதில்லை — என்பது.

பொது மக்களும், பல்வேறு கட்சிகளும், எங்ஙனம், இவ்வளவு வளமான, வளரும் சக்தி படைத்த தி. மு. க. நிச்சயமாகத் தேர்தலில் நின்றுவிடும், என்று கூறிவந்தனரோ, அதுபோலவே இந்தப் பிரச்சினையை பற்றி பொதுக்குழு கூடுவதற்கு முன் தினம் வரையிலும், தி. மு. க. பேச்சாளர்களும் எழுத்தாளர்களும், அலுவலர்களும், பொதுமக்களிடம், உறுதி கூறி வந்திருக்கின்றனர், நாங்கள் தேர்தலில் ஈடுபடப்போவதில்லை—எங்களுக்கு 'ஓட்டு' [illegible]

திராவிடநாடு

மலர் 10 | 25—11—51 | இதழ் [illegible]

இலங்கை 15 சதம்] விலை அணா இரண்டு [மலாய் 15 [illegible]

என்று கேட்கப் போவதில்லை — எங்கள் பிரச்சாரம், பதவிக்காக அல்ல—சட்ட சபையில் உட்கார அல்ல—என்பதை, திட்ட வட்டமாகக் கூறி வந்திருக்கிறார்கள். எனவே பொதுக்குழுவின் முடிவு, அவர்களைப் பொறுத்த வரையில், எதிர்பாராததல்ல! ஆசை காரணமாக, தி. மு. க. கடைசி நேரத்தில் தேர்தலில் ஈடுபட்டுவிடும், என்று கூறிக்கொண்டிருந்தவர்களுக்கு இந்த முடிவு ஆயாசம் தரலாம். அச்சம் காரணமாக, தி. மு. க. இவ்வளவு பேசுவதும், அலைந்து திரிவதும், ஓட்டு வேட்டைக்குத்தான், என்று பேசிக்கொண்டு வந்தவர்களுக்கு, "அப்பாடா தொல்லை இல்லை!" என்ற நிம்மதி ஏற்படக் கூடும். ஆனால், தி. மு. கழகத்தினருக்கு, திடுக்கிடக் கூடியதாக இந்த முடிவு இராது—அது மட்டுமல்ல, திருப்தி தருவதாக இருக்கும் — பொது மக்களுக்கோ, சொன்ன சொல்லைக் காப்பாற்றிக்கொண்டது- தி. மு. கழகம் — எனவே அந்தக் கழகம், நாணயமானது, உள்ளொன்று வைத்துப் புறமொன்று கொள்ளாது பணி புரிவது, என்ற எண்ணம் ஏற்படும். இது, நமது கழகத்தின் கண்ணியத்தை நிச்சயமாக அதிகப் படுத்தும்.

தேர்தல் அலையினால், நாம் நிலை குலையவில்லை, சொன்ன சொல்லை மாற்றிக் கொள்ளவில்லை, சபலபுத்தி நம்மை வென்றுவிடவில்லை.

வெற்றி பெறும் வாய்ப்பு உண்டு என மாற்றாரும் கூறும் நிலையில் உள்ள நாம் தேர்தலில் ஈடுபட மறுத்துவிட்டோம் — மாண்பு கெடலாகாது என்ற உறுதி இருப்பதால்.

இந்தக் கண்ணியம், தேர்தல் அலை ஓசை ஓய ஓய வளரும் — நிலைத்து நிற்கக் கூடியது. எனவே இந்த முடிவுக்கு, பொதுக்குழு ஒரு மனதாக வந்தது கண்டு என் உள்ளம் பூரித்தது. இந்த முடிவை, தி. மு. கழகத்தினர் அனைவரும், மதித்து நடந்து கொள்வார்கள் என்று பெரிதும் நம்புகிறேன்—கழகக் கண்ணியம் கெடும் வகையிலே ஒருவரும் நடந்து கொள்ளக் கூடாது என்று பணிவன்புடன் வேண்டிக் கொள்கிறேன். பொதுக்குழுவின் முடிவு தெரியாத முன்பே, ஆர்வத்தாலும், வேறுவிதமான முடிவுக்குப் பொதுக்குழு வந்து விடக்கூடும் என்று எண்ணியோ, தேர்தலில் ஈடுபட முன்முயற்சிகள் யாரேனும் செய்துவிட்டிருப்பினும், அவர்களைத் தேர்தலில் ஈடுபடாமல் விலகி விடும்படி கேட்டுக் கொள்கிறேன். கழகத்தின் கண்ணியத்தைக் கெடுத்துவிட்டு, தேர்தலில் ஈடுபட்டுப் பலன் பெறுவது, கண்ணை விற்றுச் சித்திரம் வாங்குவது போலாகும். தி. மு. கழகம், தேர்தல் கடை அல்ல—ஜனவரிக்குப் பிறகும் இயங்க இருக்கும் இயக்கம்—இதிலே இடம் பெற்று மக்களுக்குப் பணியாற்றுவது, இதைக் காலால் உதைத்துத் தள்ளிவிட்டு 'கனம்' ஆவதைவிட, மேலானது, தூய்மையானது, நேர்மையானது, என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுக் குழுவில் தேர்தல் சம்பந்தமாக, உணர்ச்சியும் அறிவுத் தெளிவும் ஒருங்கே கொண்ட முறையிலே, 45 தோழர்கள் பேசினர் — யாருடைய பேச்சிலேயும் எரிச்சல், இடித்துரைத்தல் போன்றவைகள் தலை காட்டாததும், ஒவ்வொருவரும் பிரச்சினையைப்பொது நோக்குடன் அணுகி அலசியதும், உண்மையாகவே, என் உள்ளத்தை மகிழ்வித்தது. கடைசியாகப் பேசியவனும், மிகச் சுருக்கமாகப் பேசியவனும் நான் தான் — அதுவும் முடிவு கட்டி அல்ல — எல்லாத் தோழர்களின் பேச்சையும் தொகுத்து, சுருக்கி, நிலையை எடுத்துக் காட்டினேன். இவ்வளவுக்குப் பிறகுதான், தேர்தலில் கலந்து கொள்வதில்லை என்று பொதுக் குழு தீர்மானித்திருக்கிறது. ஏன் என்பதை, பொதுக் குழுவினரின் கருத்தை அறிந்த பிறகு, அன்று மாலை, மதுரையில் நடை பெற்ற பொதுக் கூட்டத்தில் நான் விளக்கிப் பேசினேன்—இங்கும் அதனைச் சுருக்கிக் கூறுகிறேன்.

மற்ற அரசியல் கட்சிகளுக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும், எளிதிலே விளக்கப்பட முடியாத, ஆனால் அடிப்படையான வித்யாசம் இருக்கிறது.

கேடுடைய ஆட்சியை நீக்கிவிட்டு, நல்லாட்சியை அமைப்பதே, எல்லா அரசியல் கட்சிகளுக்கும் உள்ள நோக்கம்.

இன்ன கட்சி, கேடுடைய ஆட்சியை ஏற்படுத்தி விட்டது, எங்கள் கட்சிக்கு ஆதரவு தாருங்கள், நாங்கள் கேடுடைய ஆட்சியை நீக்கிவிட்டு நல்லாட்சியை நிறுவுகிறோம், என்பதே எல்லாக் கட்சிகளின் முழக்கமாகவும் இருக்கிறது.

தி. மு. கழகம், கேடுடைய ஆட்சியை நீக்கிவிட்டுநல்லாட்சிஅமைக்க வேண்டும், என்பதைக் கொள்கையாகக் கொண்டிருக்கிறது — அதற்காகப் பாடுபட விரும்புகிறது — ஆனால் அது மட்டுமல்ல, அதைவிடப் பெரியதும், அடிப்படையானதுமான வேறோர் கொள்கையையும் பொது மக்களிடம் எடுத்துக் கூறி வருகிறது.

மற்றக் கட்சிகளெல்லாம், நாட்டு மக்களின் நலிவுக்குக் காரணம், கேடுடைய ஆட்சியும் இதற்குப் பொறுப்பான கட்சியும் — எனவே ஆட்சியை மாற்றி அமைத்து விட்டால், மக்களின் நலிவு போகும்—ஆட்சி முறையை மாற்றி அமைத்துவிட்டால் மக்களின் தொல்லை ஒழிந்து போகும்' என்று கூறுகின்றன. அதாவது, இன்று இருக்கும் அரசுஅமைப்பில், அரசாட்சி முறையையோ, அரசாளும்கட்சியையோ, மாற்றி அமைத்தால் போதும், என்கிறார்கள் — நாமோ, இவைகள் தேவை. நிச்சயமாக, நாசகாலர்களின் ஆட்சி நீக்கப்பட்டு நல்லவர்கள் ஆட்சி செய்ய வேண்டும், அதற்கான பணியில் ஈடுபட வேண்டும், தி. மு. கழகம் இதைச்செய்ய விரும்புகிறது, ஆனால், இது மட்டு மல்ல!! என்று கூறுகிறோம்.

இருக்கிற அரசிலே திருத்தம் தேடுவோர், பலகட்சியினரும்.

தி. மு. கழகம், இழந்த அரசை மீண்டும் பெற்றாக வேண்டும், என்ற தனியானதோர் கொள்கையைக் கொண்டிருக்கிறது.

இது தேவையற்றது என்று சில கட்சிகள் கருதக்கூடும் — கருதுகின்றன.

இது புரியாத பிரச்சினை என்று காங்கிரசின் சார்பிலே காமராஜர் கூறுகிறார் — அவரை நம்மாலே புரிந்துகொள்ள முடிகிறது — அவருக்கு வேறு பல பிரச்சினைகளும் புரியவில்லை என்பதும் நமக்குத் தெரிகிறது — பொது மக்களையே புரிந்து கொள்ளாதவருக்கு, திராவிடநாடு பிரச்சினை புரியாததாக இருப்பதிலே ஆச்சரியமும் எழுவதற்கில்லை.

மற்றக் கட்சிகள், தனித்திராவிட அரசுப் பிரச்னைபற்றிக்கொண்டுள்ள கருத்து எதுவாக இருப்பினும்,நாம் நமது கருத்தைப் பொதுமக்களிடம் பல ஆண்டுகளாக திட்டவட்டமாகக் கூறிவந்திருக்கிறோம் —திராவிடத் தனி அரசு அமைப்பதையே நமது குறிக்கோளாகக் கொண்டிருக்கிறோம்.

ஆட்சியிலே உள்ள அலங்கோலத்தைமட்டும் கருத்திலேகொண்டு அதைமாற்றி அமைத்தால்போதும் என்று எண்ணிப் பயனில்லை,—அதனையும் செய்வோம், ஆனால் அது மட்டுமல்ல, நமது நாடு எது, நமது இனம் என்ன, நமது முன்னாள் வரலாறு யாது, எதிர்காலம் எங்ஙனம் இருத்தல் வேண்டும், என்பதை மறவாமல், அந்த இலட்சியத்திலிருந்து வழுவாமல், இடைக்கால பிரச்சினைகளையும் கவனித்தாக வேண்டும்.

இடைக்காலப் பிரச்சினை நமது அடிப்படை பிரச்சினைக்குக் கேடு தருவதாக இருத்தலாகாது.

இடைக்காலப் பிரச்சினையில் மூழ்கி, அடிப்படைப் பிரச்சினையை மறத்தலாகாது.

இடைக்காலப் பிரச்சினைபற்றி நாம் கொள்ளும் கருத்தும் எடுக்கும் நடவடிக்கையும் நமது அடிப்படைப் பிரச்சினையைக் கெடுக்கும் விதமாக இருத்தலாகாது—மாறாக, ஆதரவு தருவதாக அமைதல் வேண்டும்.

நரிவேட்டையிலீடுபட்டு, புலி வேட்டையை மறந்துவிடலாகாது.

புலிவேட்டையாடப் போகும் வழியில் தட்டுப்படும் நரியைவிரட்டுவோம், ஆனால், நரியையே புலியென்று எண்ணிக்கொண்டு, வேட்டை முடிந்தது என்று நம்பி விடக்கூடாது.

திராவிடத் தனி அரசு என்ற திட்டத்தை நமது கழகத்தின், இலட்சியகீதமாக்கிக்கொண்டோம். நாம் திராவிடர், வாழ்ந்தவர்கள்—இன்று 'மதறாஸ்வாலாக்கள்' என்று அழைக்கப்படுகிறோம், ஒரு அனைத்திந்திய ஆட்சிக் குழுவால்! நமது வரலாறு, வாகைகள் நிறைந்த ஏடு—இன்று வளமிழந்து கிடக்கிறோம், வடவர் ஆட்சியில். இனத்தை உணரவும், எழில் அரசு இருந்தது தனிச்சிறப்புடன் என்பதை உணரவும் பல ஆண்டுகள்பாடுபட்டோம். இன்று இழந்த இன்பத்தைப் பெறுவோம் — தந்தையர் நாட்டை மீட்போம்—சொந்த ஆட்சியைஅமைப்போம் — தாய்த்திருநாட்டின் தளைகளை அறுத்தெறிவோம், என்று சூளுரை கூறி, சோர்விலாதுஉழைக்கும் ஆயிரமாயிரம் வீரரைக் காண்கிறோம். அவர்களின் இலட்சியப் பயணத்தை, தேர்தல் தடைப்படுத்தலாகாது. இன்பபுரிப் பயணம் நிற்ககூடாது — இடையிலே மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை தெரியினும், சிதறியமண்டை ஓடுகள் தெரியினும் கவலையில்லை—பயணம்—பயணம்—தொடர்ந்து பயணம் நடந்தாகவேண்டும்.

இடையே எழும் எந்தப் பிரச்சினையும் இலட்சியப் பயணத்தைத் தடை செய்வதாக இருத்தலாகாது. அந்த முறையிலேயே, அந்த நோக்குடனேயே அவ்வப்போது எழும் இடைக்காலப் பிரச்சினைகளைக் கவனித்து நாம் முடிவு கட்டவேண்டியவர்களாகிறோம். இந்தநிலை, மற்றக் கட்சிகளுக்கு இல்லை. தி. மு. கழகம் இந்த நிலையை மறப்பது என்றால், உயிரை இழப்பதாகும்,

ஆட்சியைமாற்றி அமைப்பது என்ற பிரச்சினை போன்றதல்ல, அரசை அமைப்பது என்ற பிரச்சினை! அரசு அமைப்போர், ஆட்சியை மாற்றும் பிரச்சினையைக் கவனிக்காமலிரார், என்பதல்ல,ஆனால், அதிலேயே மூழ்கிவிடார்!!

சமுதாயத்தில், பிரச்சாரமூலம் புதியநிலையைச் சமைத்துக் காட்ட வேண்டும், என்பதும், மற்றக்கட்சிகள் கடைசித்தரமாகக்கருதும் பிரச்சினை, நமக்கோ, மிக மிக முக்கியமான பிரச்சினை. எனவே, மற்றக் கட்சிகள், தேர்தல்போன்ற பிரச்சினைகள்பற்றி முடிவு செய்வதற்குக் கொள்ளும் அளவுகோல் அல்ல, நம்முடையது.

இந்தத் தேர்தலில், கேடுடைய ஆட்சியைக் களைய வேண்டாமா — ஆமாம் — கட்டாயம் களையத்தான் வேண்டும் என்கிறோம் ஆனால் அதைத் தொடர்ந்து கூறுகிறோம், இன்றைய கேடும் களையப்படவேண்டும், எமது இகயகீதமும் கெடலாகாது — இந்த முறையிலேதான் எமது முடிவு அமையும் என்று கூறுகிறோம்.

தேர்தல் கண்ணைமட்டும் வைத்துக்கொண்டு பார்த்தால் பிரச்சினை புரியாது.

கண் வைத்தியர் கூறுகிறார் — எனக்குத்தான்— படிப்பதற்கு உபயோகமாகும் பகுதி ஒன்றும், தூரப் பார்வைக்கு உபயோகமாகும் விதமான பகுதி ஒன்றும், இந்த இரண்டும் ஒன்றாக இழைந்து—இணைந்து கூட அல்ல, இருப்பதுமான முறையில் உங்களுக்குக் கண்ணாடிதேவை என்று.

தி. மு. கழகமும் அதுபோன்ற கண்ணாடி கேட்கிறது.

தேர்தல் பிரச்சினைக்கும் தெளிவு வேண்டும், அடிப்படை பிரச்சினைக்கும் தெளிவுவேண்டும்,இன்று நாம் மேற்கொள்ளும் போக்கு, இரு நோக்கமும் பாழ்படாத விதமாக இருக்கவேண்டும் என்று விரும்புகிறது.

வயிற்றுவலிக்காரனுக்கு டாக்டர் கூறுகிறார், ஓட்டல் சாப்பாடு உடலைக்கெடுக்கும், வீட்டுச் சமையல் நல்லது, உடல்நலம்கெடாதுஎன்று. நோயாளி கூறுகிறான், மணமாகாதவன் நான், பிழைப்பு தேடி இவ்வூர் வந்தேன், என்று. அப்படியானால், இப்போது சாப்பிடும் ஓட்டலையாவது மாற்று — வேறு ஓட்டலைப் பார்—என்று. தற்காலிகமான பரிகாரம்! இதே உதாரணத்தைத் தொடர்ந்து கூறுகிறேன்—கேலிக்காக அல்ல — நேருகபேயில் சாப்பிட்டுச் சாப்பிட்டு உடல்நலம் கெட்டுவிட்டது, வேறு ஓட்டலைத் தேடலாமென்றால்புதியபுதியபலகைகள் தெரிகின்றன, கிருபளானிகபே ஜெயவிலாஸ், ஜீவானந்தம் மிலிடரி ஓட்டல், தண்ணீர்பந்தல்; பிரசாதம் விற்கப்படும், இப்படிப் பலஉள்ளன இவைகளிலே ஒன்றைத் தேர்ந்தெடுப்போமா, என்று இன்று ஓட்டர்கள் யோசிக்கும் நிலையில் இருக்கிறார்கள். டாக்டரின் பேச்சைக் கவனப்படுத்துவது போல, நாம் கூறுகிறோம், எந்த ஓட்டலைத்தேர்ந்தெடுத்தாலும், அன்பனே! வீட்டுச் சமையலுக்கு ஈடு எதுவும் இல்லை என்பதைமறவாதே,திராவிடத்தனி அரசு பெறுவது என்பதை மறந்துவிடாதே என்பதைக் கவனமூட்டுகிறோம்.

தேர்தலிலே நாமே ஈடுபட்டுவிட்டால், இந்தச் சிக்கல் வந்திராது என்பது உண்மையே—ஆனால், ஈடுபடுவது நமது கண்ணியத்தைக் கருவறுத்திருக்கும்.

மேலும், இந்த பொதுத் தேர்தல், இந்திய அரசியல் சட்டத்தின்படி நடைபெறுகிறது. அந்த அரசியல் சட்டம், காங்கிரஸ் கட்சி தன் எதேச்சாதிகாரப் போக்கினால், தீட்டியது. அந்தச் சட்டம் உருவாக்கப்பட்டு வந்த போது, பொதுமக்களிடம் விளக்கிக் கூறப்படவில்லை, விவாதிக்கப்படவில்லை, முடிவுதான் பொது மக்களிடம் அறிவிக்கப்பட்டது. திராவிடர்களின் கருத்து கோரப்படவில்லை—நுழைய இடம் தரப்படவில்லை, திராவிடரின் ஜீவாதார உரிமைகளுக்கு ஊறுதரும் விதமாகவே மேற்படி சட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. இதனை நாம் கண்டிக்கிறோம் — இதனினின்றும் விடுபடுவது, திராவிடத்தனி அரசு அமைப்பது என்று உறுதி கொண்டிருக்கிறோம். எனவே, உலகுக்கு நாம் நமது கண்டனத்தைத் தெரிவிக்கவேண்டும் —:இன்றைய முதல் பொதுத் தேர்தலில் கலந்து

(5-ம் பக்கம் பார்க்க)

திராவிடநாடு

காஞ்சி] 25—11—51 [ஞாயிறு

மதுரை முடிவுகள்

★

மதுரையம் பதியில், நவம்பர் 17 18, சனி, ஞாயிறு இரு நாட்களிலும் திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக் குழு கூடிற்று.

17ந் தேதி காலை 11-மணியிலிருந்து இரவு தாண்டி, மறுநாள் காலை 5 மணிவரை பொதுக்குழு தொடர்ந்து நடந்தது.

ஏறத்தாழ 17 மணி நேரம் பொதுக்குழு உறுப்பினர்கள் கூடிப் பேசினர்—விவாதித்தனர்.

கழகத்தின் சட்டதிட்டம், நடக்கவிருக்கும் பொதுத் தேர்தல், மாநில மாநாடு ஆகிய முக்கிய பிரச்சினைகள் மூன்றினைக் குறித்தும் நீண்ட நேரம் ஆலோசித்தனர்.

பொதுக்குழு உறுப்பினர்கள் அனைவரும், தங்கள் அறிவுத் திறனையும், தெளிவையும் அளித்து, அரிய முடிவுகள் செய்துள்ளனர்.

கூட்டம் துவங்கியதும், பொதுக்குழு எடுத்துக் கொள்ளவிருக்கும் பிரச்சினைகள் பற்றி பொதுச் செயலாளர் சிறிது விளக்கினர். பிறகு, கழகத்தின் சட்ட திட்டங்களைப் பொதுக்குழு முன்தான் சமர்ப்பிப்பதாகக் கூறி, சட்ட திட்டக்குழு செயலாளர், தோழர், K.A.மதியழகன், ஒவ்வொரு பிரிவாகப் படிக்கத்துவங்கினர்.

அவர் படித்து விளக்க, அது பற்றிய திருத்தங்களையும், தக்க மதுகருத்துக்களையும், பொதுக்குழு உறுப்பினர்கள் எடுத்துக் கூற, ஒவ்வொரு பிரிவாக நிறைவேறிற்று.

பாய்ந் தோடும் நீர் வெள்ளத்தைத் தேக்கிப் பாய்ச்சினல் தானே பலன் காணமுடியும்! காட்டாறு, பயிரை வளர்க்காதே! நிலங்கொழிக்க, வரப்பும், நீரோடைகளும், தேவைப்படாவோ?

கட்டுப்பாடு இல்லாத வாழ்வும், அணைக்கட்டு இல்லாத வெள்ளமும் ஆபத்துத்தானே! ஆகவேதான், கழகத்துக்கான சட்டதிட்டங்களைக் காண்பதில், கவலையோடு இருந்தனர்—பொதுக்குழு உறுப்பினர்கள்.

கழகவளர்ச்சிக்கான வேலி அமைக்கும் வேலைகளைச் சுமந்து கிடக்கிறோம்' என்ற ஆர்வத்தால், அவர்களுக்கு நேரம் போனதே தெரியவில்லை காலையிலமர்ந்தோர், இரவு 11 மணி வரையில், ஆடாது அசையாது—இருமுறை உணவுக்குக்காகச் செலவழித்த சிறு நேரம் போக—'போதும்— நிறைவேற்றுங்கள்' என்று சலிக்காது, காலைமலர்ந்த ஆர்வம் சிறிதும் கருகாது நள்ளிரவு வரையில் உற்சாகத்தோடு, வாதமிட்டு, சட்டதிட்டங்களை நிறை வேற்றினர்.

"சட்டதிட்டங்களை அருமையாக நாம் நியமித்த சட்ட திட்டக் குழுவினர் ஆக்கித்தந்தனர். அதை, கூர்த்தமதியும் வாதத்திறனும், காட்டி, நாம் நிறை வேற்றி விட்டோம். இத்தகைய சட்ட திட்டங்களை நாம் நிறை வேற்ற வேண்டும். நல்லதைச் செய்தோம் — ஆனல் அதை நடை முறையில் காட்ட நாம் தவறினேம் என்கிற பழிச் சொல்லுக்கு ஆளாகக் கூடாது. கழக அமைப்பை வெற்றிகரமாக ஆக்கும் பொறுப்பிலே நாம், ஈடுபட வேண்டும்"

என்று, பொதுச் செயலாளர், தெரிவித்தபோது, பொதுக்குழுக் காளைகள், 'ஆம்! ஆம்!!' என்று கூறவில்லை; அவர்களது கைதட்டல் பேசிற்று! கவலையறியா கண்கள், பதில் பேசின!!

பொதுச் செயலாளர், கழகத்துக் கான சட்ட திட்டக் குழுவை அமைத்துத்தந்த முன்னணி வீரர்களை, பாராட்டினர். மேற்படி குழுவின் செயலாளராக இருந்து பணி புரிந்த வீரர், கே, எ, மதியழகன் சாமான்யரா சட்ட திட்டக் கல்லூரிக்காளை, சமராடும் துணிவும், சரியாத ஆர்வமும், துவளாத இதயமும் படைத்ததீரர். அவரோடு உழைத்து, அரும்பாடுபட்ட தோழர்கள் இரா. நெடுஞ்செழியன் M. A., இரா. இளம்வழுதி M. A., B. L., ஈ. வே. கி. சம்பத், இரா. செழியன் M. A., காஞ்சி மணிமொழியார், N. V. நடராசன், கே. கோவிந்தசாமி ஆகியோர், நமது வீர விளக்குகளாயிற்றே! ஆகவே, பொதுச் செயலாளரின் பாராட்டுதலை, அக மகிழ்வோடு வரவேற்றனர், பொதுக் குழுவினர்.

கழகத்துக்கான இந்த மகத்தான பணி, முடிவுற்றதும், கழகத்தை நோக்கிக் காத்துள்ள தேர்தல் பிரச்சினைகுறித்து, கவனம் செலுத்த விரும்பினர்.

தேர்தல் காய்ச்சல், வீசிவரும் வேளை! 'ஐக்கிய முன்னணி' என்ற, புது முயற்சி, எங்கும் அடிபடும் வேளை! ஆகவே நாட்டின் கவனமும் தேர்தலோட்டத்தின் கண்களும், திராவிட முன்னேற்றத்தின் மீது பதிந்து கிடக்கிறது. மகத்தான கழகம்! நாட்டுமக்கள் அதன் நிழலில் இலட்சக் கணக்கில் திரள்கின்றனர்! நாடோறும் அதன் குரல் ஒலிக்கிறது! எனவே, நாடு ஆளும் ஆசைகொண்டோர் நம்மை எதிர் பார்க்கின்றனர்! நமது ஆதரவு கிட்டுமா, வோட்டுகள் கிடைக்குமா, என்கிற ஆசையோடு. அந்த ஆசையால், என்றுமில்லாத பாசமும் பரிவும், பாய்ந்தோடி வருகிறது, நம் மீது.

நம்மைப்பார்த்து முன்பு கேலி பேசியோர், இப்போது நெருங்கி வந்து, நேசம் பாராட்டுகின்றனர்.

தூற்றியோர் — துதிபாட வருகிறார்கள்.

"இதுகளால் முடியுமா', என்றோர், 'நீயல்லால் துணையுண்டோ?' என்று புன்னகவராளி பாட வருகின்றனர். காங்கிரஸ் ஏகாதிபத்தியம் வருகிறது—இது கேடல்லவோ? ஒழிக்க வேண்டாமோ! ஆகவே, எனக்கு ஆதரவு தாருங்கள்' — என்று புலப்பலர்.

தேர்தல் நேரத்திலே, நம்மோடு உறவாட வருவோர்களின், பட்டியல்—மிக மிக அதிகமாகி வருகிறது.

இந்தப் பட்டியலைக்காண நாம் பூரிக்கவில்லை. புண் மீது ஈட்டி போல, இவர்கள் பேசிய பேச்சுக்கள், நமது இருதயத்தில் இன்னும் ஈரமாக இருப்பதால்.

துச்சமென நினைத்தோரெல்லாம், 'துந்துபி பாடுறோம்' என்று பாடிவரும் வேகத்தைக் கண்டு, நாம் ஏமாந்துவிட, ஏமாளிகளுமல்ல!

பசுவை உறவுக்கு அழைக்கும் புலியை நமக்குத் தெரியும்! பாம்புகள், படமெடுத்து ஆடுவது, மகுடியால்தான், மகுடிநாதம் மறைந்ததும் பாம்புகள் கொத்தவரும் என்பதை நன்றாக அறிந்தவர்கள் நாம்.

எனவே, ஆசையோடுகைகோர்க்க வரும் — பட்டியலைக்காண, சிறிது முன்ஜாக்கிரதை, தேவைப்படுகிறது, நமக்கு.

ஏனெனில், நமது கொள்கைகள், சந்தர்ப்பக் காற்றால் சல சலப்பவை அல்ல; இஷ்டப்படி வளைத்தும், விருப்பப்படி நிமிர்த்தவுமான, நிலையிலிருப்பதும், அல்ல.

அதோடு, அரசியல் வானில் நாம் ஒளிவிடும் கதிரோனகப் பிரகாசிக்க விரும்புகிறோம் — இஷ்டப்போல் திரியும் மேகங்களாக அல்ல.

மேகத்தைப்போல், தத்துக்கிளி ஆட்டம் போடுவோருக்கு, நிமிடத்துக்கு நிமிடம் கொள்கைகளை மாற்றவும், வளைக்கவும், நிமிர்க்கவும், முடியும். அதுவே அவர்கள் வாழ்வாக இருப்பதால்.

எனவே, இரண்டு முக்கிய விஷயங்களை பொதுக்.குழுவினரின், வாதம் தெளிவு படுத்திற்று.

ஒன்று: தேர்தல் கால அலைகளால் மகிழ்ந்து, தெந்தினபாடிவிட்டு பிறகு திகைப்பது கூடாது.

இரண்டாவது: பிற்போக்குக் கும்பலின் நாசக் கோலம் நசுக்கப்பட்டு, நேர்மையான முற்போக்காளர், சட்ட சபைகளில் அமரும் நிலை பிறக்கவேண்டும்.

விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கையில், ஒரு தோழர் கேட்டார், "இப்போது பலர் உறவாட வருகின்றனரே — நாம் தேர்தலில் நிற்பதாகச் சொல்லியிருந்தால், இன்று அவர்கள் நம்மீது காட்டும் பாசமும் பரிவும், ஆர்வமும் அணைப்பும், மலர்ந்திருக்குமோ?" என்று.

உண்மையில், நாம் தேர்தலில் நிற்கும் கட்சியினராக இருந்தால், இன்று நேச பாவத்தோடு வருவோரின், ஆசையும் பாசமுமல்ல, தூற்றலும் ஏசலுமே, நம்மை ஆலவட்டம் சுற்றும்.

இது, அறியாதவரல்ல, நாம்.

ஆனல், அதே நேரத்தில், இன்று பாசத்தோடு வருவோரில், முற்போக்குக் கொள்கையுடையோரும் இருப்பது தெரியும் நமக்கு.

ஆகவே, இரண்டு வழிகளில், நாம் முடிவு கூறவேண்டியவரானேம்.

நமது இலட்சியம் காக்கப் படவேண்டும்.

முற்போக்காளர், சட்டசபைகளிலே, இடம் பெறவேண்டும்.

இந்த ஆசைகளால், பொதுக்குழு, நலலதோர், முடிவைக் கூறியது. இம்முடிவை, பொதுச் செயலாளர் விளக்கிப் பேசினர்.

தேர்தல் நேரத்தில் நமது ஆதரவையும் ஒத்துழைப்பையும் 'கம்யூனிஸ்டுகளையும் காங்கிரசல்லாத நாணயமுள்ள திறமைசாலிகளான முற்போக்குக் கருத்தினரையும் ஆதரிப்பது' என்ற முடிவையொட்டி, கீழ்க்கண்ட ஒப்பந்த பத்திரம் (PLEDGE) செய்து கொள்ளப்படவேண்டும், என்று முடிவு செய்தது.

நமது நேச கரத்தை, வேண்டுகிறார்கள்! நாமும், கனிவோடு கரம் தருகிறோம் — மறுக்கவில்லை!! ஆனல், இடையில் இருவருக்குள்ளும் ஒரு ஏற்பாடு இருக்கவேண்டுமென்கிறோம்.

உழைப்பையும் ஆதரவையும், திரட்டிச் சேர்த்த சக்தியையும் அன்போடு தரும் நாம், அவைகளைப் பெறுவோரிடமிருந்து எதிர் பார்க்கும், கைம்மாறு, மிகப் பெரிதல்ல.

நமது உரிமையுணர்ச்சியை, நமது ஆதரவு பெறுவோர் ஆதரிக்க வேண்டும். நமது இலட்சிய வேகத்தின், அருமையை இவர்கள் உணர வேண்டும். ஆகவேதான்,

"திராவிடத் தனி அரசுப் பிரச்னையை ஆதரிக்கிறேன்"

சட்ட சபையில் — பார்லிமென்டில் உறுப்பினராளுல், சட்டசபையில் மேற்கண்ட பிரச்னை சம்பந்தமாகவும், தி. மு. கழகக் கொள்கைக்கு ஆதரவு தேடும் வகையில் பணியாற்றி வருவேன்.

சுரண்டலையும் எதேச்சாதிகாரத்தையும் ஒழிக்க திராவிட முன்னேற்றக் கழகம் வெளியிடும் திட்டங்களுக்கு ஆதரவு கிடைக்கும் விதமாகவும் சட்ட சபையில் — பார்லிமெண்டில் பணியாற்றுவதாக உறுதி கூறுகிறேன்"

என்பதான, தேர்தல் ஒப்பந்தத்தில், கையெழுத்திட்டு, பொதுச் செயலாளரின் அனுமதி, பெற வேண்டும் என்று, பொதுக்குழு முடிவு கூறியிருக்கிறது.

பெயர்ப் பட்டியலை, நடைபெறவிருக்கும் மாநில மாநாட்டில், பொதுச் செயலாளர் வெளியிடுவார்.

இந்த முடிவை பொதுக்குழு, மகிழ்ச்சியோடு ஏற்றதோடு, மாநில மாநாட்டில் இந்தப் பட்டியல் வெளியிடப்படும் வரையில் எந்தக் கழகத் தோழரும் தேர்தல் சம்பந்தமான அலுவல்களில் இறங்கக் கூடாதென்றும், அறிவித்தது.

இந்த முக்கிய தீர்மானம், நிறைவேற்றப்பட்டபின், மாநில மாநாடு குறித்தும், அதைச் சிறப்பாக நடத்தும் வழிவகைகள் பற்றியும், பொதுக்குழுவினர், ஆராய்ந்தனர்.

மாநில மாநாடு, நமது எண்ணங்களை உருவாக்கும், சரித்திரமாநாடு. இம் மாநாட்டில் தான், நமது எதிர்காலம், தீட்டப் படப்பேகிறது! நாட்டுப் பிரிவினைக்கான நற்பாதைகள், அந்த நாட்களில் வகுக்கப் படப் போகின்றன!

ஆகவே, எல்லா உறுப்பினரும், வெகு ஆர்வத்தோடு, மாநாடு பற்றிய தமது ஆலோசனைகளைத் தந்தனர். 'எதிர் காலப் பூந்தோட்டம்-நமது மாநாடு' என்கிற எண்ணம் பரிமளித்தது, அங்கே. அந்த ஆர்வமும், நமது தொண்டும் — நமது அழியாச் செல்வங்கள். அதை வைத்து, நம் பணியைத்தொடர்ந்து புரிவோம்! கண்பத்திற்கும் கடமைக்கும் என்றும் பலனுண்டு! இலட்சிய வெற்றியே நம்குறிக்கோள்! அதைப் பெறப் போராடுவோம்! நமது மூச்சு ஓயும் வரையில், போராடுவோம்!!

★

* இன்பத்திராவிடத்தின் இலட்சிய ஏடு!
* புதுமை—புரட்சிக் கருத்துக்கள் பூத்துக்குலுங்கும் புத்தம் புதிய பூஞ்சோலை!
* பகுத்தறிவியக்கத்தின் பாசறை! முன்னேற்றக் கருத்துக்களின் முரசொலி!
* அறிவுக் கதிர் ஆராய்ச்சி ஒளி! எழுச்சி உதயம்!

களஞ்சியம்

(திராவிடர் தமிழ் மாத இதழ்)

டிசம்பர் 1ந்-தேதி வெளிவருகிறது

தனிப் பிரதி 0—4—0

ஆண்டு சந்தா 3—0—0

அதிக பக்கங்களுடன், அழகிய படங்களைத் தாங்கி குறைந்த விலையில் வெளிவருகிறது.

எங்கும் முன்பணம் கட்டக்கூடிய நல்ல ஏஜண்டுகள் தேவை.

"களஞ்சியம்"

38, செயின்ட் மேரீஸ் ரோடு

சென்னை 18.

சென்னை நகரில் S. I. A. A. திடலில்

திராவிட முன்னேற்றக் கழக மாநில மாநாடு

★

தலைவர்

சி. என். அண்ணாதுரை எம். ஏ.

திறப்பாளர்

கே. கே. நீலமேகம்

ஓவியக் கண்காட்சி திறப்பாளர்

சி. பி. சிற்றரசு

வரவேற்புக்குழு தலைவர்

என். வி. நடராசன்

★

டிசம்பர் 13, 14, 15, 16 நாட்களில்

நான்கு நாட்களிலும்

இன்னிசை

தமிழிசை வல்லுநர்

சி. எஸ். ஜெயராமன்

நாகூர்

அனீபா

இசைச் செல்வி

கஸ்தூரிபாய்

இன்னும் பலரின் இன்னிசை

விருந்துண்டு

நாடகங்கள்

நடிப்புப்புலவர்

கே. ஆர். ராமசாமி

தம் குழுவினரும் நடிக்கும்

சந்திரோதயம்

ஜமீன் மாளிகை

மாதர்பாக்கம் ஆந்திரத் தோழர்கள்

நடிக்கும்

குலமிலேனிபில்லா

தி. பெ. மு. கழகத் தோழிமார்கள்

தோன்றும்

போராட்டம்

திருச்சி என். சாம்பு

பொருளாளர்

மணிமொழியார்

கே. மனோகரன்

செயலாளர்கள்

மு. கருணாநிதி

டி. எம். பார்த்தசாரதி

கலைக்குழு

தில்லை—வில்லாளன்

சௌரிராசன்

கே. ஏ. மதியழகன், பி. ஏ.,

ஓவியக் காட்சிக்குழு.

சி. வி. ராசன்

ஏ. கே. சாமி

ஆர். டி. அரசு

கிருஷ்ணன்

பந்தல் அமைப்புக்குழு.

இரா. நெடுஞ்செழியன்

ஈ. வே. கி. சம்பத்

வி. கே. ஜான்

மதியழகன், பி. ஏ.,

பராங்குசம்

தீர்மானக்குழு.

★

ஓவியக் கண்காட்சி

புதுமை விருந்தளிக்கும் ஓவியக் காட்சி மாநாட்டில்

முக்கிய பகுதியாக விளங்கும்

சட்ட திட்டம் தயாராகிவிட்டது!

★

தி. மு. கழகம் துவங்கி இரண்டாண்டுகளாகி விட்டன.

தி. மு. கழகத்திற்கு சட்ட திட்டம் தயாரிக்க, துவக்க நாளிலேயே ஒரு குழு அமைக்கப்பட்டது.

அந்தக்குழு, இந்த இரண்டாண்டு காலத்தில் மூன்று முறை கூடிற்று.

இரண்டு நகல்களைத் தயார் செய்து பொதுக்குழு உறுப்பினர்களுக்கு அனுப்பி அவர்தம் கருத்துரைகளையும் திருத்தங்களையும் பெற்று சட்ட திட்டம் முழு உருவடைந்து விட்டது.

மதுரையில் நடந்த பொதுக்குழு, தி. மு. கழக சட்ட திட்டத்தைப் பரிசீலித்து, ஏற்றுவிட்டது.

சட்ட திட்டம் வகுப்பது சாதாரண பணியல்ல—பல ஆண்டுகள், பல முதறிஞர்கள் சேர்ந்து முயன்று முடிக்கவேண்டிய மாபெரும் சாதனை — அதனை செய்து முடித்து விட்டோம்.

சட்ட திட்டம், ஏடாக, கழகத் தோழர்களின் கரங்களில் தவழ்ந்தால் மட்டும் போதுமா?

சட்ட திட்டங்கள் நடைமுறையாக்கப்படவேண்டும்.

அதற்கு, தலைமைப் பணிமனை விரிவான முறையில் செயலாற்ற வேண்டும்.

அதற்கோ பணம் வேண்டும் கழகத் தோழர்களின் கட்டுப்பாடான ஒத்துழைப்பு வேண்டும்.

சட்டமிருப்பது மட்டும் போதாது. அது சரியான முறையில் நடைமுறைக்குக் கொண்டுவரவேண்டும்.

சட்ட திட்டத்தை உருவாக்கக் காட்டிய ஆர்வத்தைப்போல் ஓராயிரம் முறை அதிக ஆர்வம் வேண்டும். அதைவிட அதிகமான அளவில் கட்டுப்பாடு வேண்டும். இவைகளுக்கு மேலாக, கண்ணியம் வேண்டும்.

சட்ட திட்டம் தயாராகிவிட்டது, தோழர்களே!

அதனை, நடைமுறையில் நடத்துவிக்க தயாராகுங்கள்!

சட்ட திட்டம் காட்டும் வழி நடக்கவும், அதனை நடத்துவிக்கவும் ஒத்துழைப்பு தாருங்கள்!

★

நடைமுறையாக்க தயாராகுங்கள்!

கழகத் தோழர்களே!

✲

உங்கள் ஊர் சின்னம்—கழகக் கொடி, தலைமை நிலையத்துக்கு அனுப்பப்பட்டு விட்டதா?

தி. மு. க. மாநில மாநாடு,

காஞ்சி.

2-ம் பக்கத் தொடர்ச்சி

கொள்ளாமலிருப்பது நமது கண்டனத்தை உலகுக்கு அறிவிக்கும் முறையாகும். இந்த நோக்குடனேயே, நாம் பொதுத்தேர்தலில் கலந்து கொள்வதில்லை. இதனை மதுரை பொதுக்குழு,

"திராவிடர்களின் கருத்தை அறியாமலும், திராவிடரின் ஜீவாதார உரிமைக்கு ஊறுசெய்யும் முறையிலும், ஒரே கட்சியாரின் எதேச்சாதிகார முறைப்படியும் தயாரிக்கப்பட்ட இந்திய அரசியல் சட்டத்தை திராவிட முன்னேற்றக் கழகம் கண்டிப்பதன் அறிகுறியாக, அந்த சட்டத்தின்படி நடைபெறும் முதல் பொதுத் தேர்தலில், தி. மு. கழகம் அபேட்சகர்களை நிறுத்தி கலந்து கொள்வதில்லையென்று தீர்மானித்திருக்கிறது."

பொதுக்குழுவின் தீர்மானம், நமது நிலைமையையும் நினைப்பையும் நன்கு விளக்குவதாக அமைந்திருக்கிறது என்பதை அனைவரும் ஒப்புக் கொள்வர்.

அடிப்படைப் பிரச்சினைக்கு நாம் கட்டுப்பட்டிருக்கிறோம், எனவே இடைக்காலப் பிரச்சினையான தேர்தல் கிளம்பியுள்ள வேளையிலும் நமது அடிப்படை பிரச்சினையை இழந்துவிடாமலிருக்க, இந்தத் தீர்மானம் செய்திருக்கிறோம்.

இடைக்காலப் பிரச்சினையைப் பொறுத்த மட்டில், நமது கருத்தைப் பொதுக்குழு, வேறு தீர்மானங்கள் மூலம், தெளிவுபடுத்தி இருக்கிறது.

இடைக்காலப் பிரச்சினையான தேர்தல், நாட்டில் இன்று உள்ள கேடான ஆட்சி முறையை மாற்றி நல்லாட்சி அமைப்பதற்கு நிச்சயமாகப் பயன் படும்—அந்த அளவிலேயும் வகையிலேயும் நமக்கு இந்தப் பிரச்சினை குறித்து அக்கரை இருக்கத்தான் செய்கிறது. நாட்டிலே, எல்லா வகையினராலும் காங்கிரசாட்சி வெறுக்கப்படுகிறது. இது, காங்கிரசல்லாத கட்சிகளின் சொற்பொழிவுகள் மூலமாகவே மட்டுமல்லாமல், நேற்றுவரை, காங்கிரசிலே இருந்து வந்தவர்களின் பேச்சினாலும் விளங்குகிறது.

உலகிலே, வேறு எங்கும், வாழ்த்தி வரவேற்கப்பட்ட ஒரு கட்சி, நாலாண்டு காலத்துக்குள் இவ்வளவு சீரழிவுபட்டு, பொது மக்களின் வெறுப்புக்கு ஆளானதாகத் தெரியவில்லை. சீன நாட்டுச் சர்வாதிகாரி சியாங்கால், எவ்வளவு காலம் ஆதிக்கம் செலுத்த முடிந்ததோ அந்த அளவுக் காலம் கூட ஜவஹர்லால் நேருவால் ஆதிக்கம் செலுத்த முடியவில்லை—அதிர்ச்சி வைத்தியமும் பலன்தரவில்லை. காங்கிரசை முறியடித்தாக வேண்டும் என்ற எண்ணம் எங்கும் பரவி இருக்கிறது.

தி. மு. கழகம், காங்கிரஸ் முறியடிக்கப்படவேண்டும் என்பதைப் பொதுமக்களிடம் எடுத்துக் கூறி வருகிறது.

பொதுமக்கள், இந்தத் தேர்தலில், காங்கிரசை முறியடிக்க, காங்கிரசல்லாத நாணயஸ்தர்களை ஆதரிக்க வேண்டும் என்று பிரச்சாரம் செய்து வருகிறது.

யாரை ஆதரிப்பது என்பது பற்றி, பொது மக்களே தீர யோசித்து முடிவு செய்யவேண்டும் என்பதையும், தி. மு. கழகம் வலியுறுத்தி வந்திருக்கிறது.

பொதுக் குழுவினர் இது பற்றித் தமது கருத்துரைகளை வழங்கினதில், பொதுமக்களுக்குத் தி. மு. கழகம், இது குறித்து மேற்கொள்ள வேண்டிய போக்கை எடுத்துக் காட்டுவது அவசியம் என்பதைப் பலர் வலியுறுத்தினர்.

தேர்தலில் போட்டியிடும் காங்கிரசல்லாத பல கட்சிகளில் எந்தக் கட்சியும், தி. மு. க. வின் அடிப்படை திட்டத்தை ஏற்பதாகத் தெரியக் காணோம், ஒவ்வொரு கட்சியும் உறவு கொண்டாடவும், காங்கிரஸ் ஒழிப்பின் அவசியத்தை வலியுறுத்தவும் முன் வருகின்றனவே தவிர, திராவிடத் தனி அரசு அமைப்புக்கான ஆதரவு தருவதாகக் காணோமே என்பது பற்றிப் பலர் எடுத்துக்காட்டி, இந்த நிலைமைக்காக வருந்தினர்.

அதாவது, பொதுத் தேர்தலில் காங்கிரசை முறியடிக்கும் சந்தர்ப்பம் இருக்கிறது, அதை தி. மு. கழகம் இழந்துவிட விரும்பவில்லை, ஆனால் அதேபோது, காங்கிரசை முறியடிக்கும் முயற்சியிலொன்றுபட அழைக்கும் கட்சிகள், திராவிடத் தனி அரசு பற்றிய ஆதரவு தருவது குறித்து ஏதும் கூறாது இருக்கும் போக்கையும் ஏற்றுக்கொள்வதற்கு இல்லை.

இந்நிலையிலே, நான், கம்யூனிஸ்டு கட்சித் தலைவர்கள், பல தடவைகளில் என்னிடம் பேசியதை எடுத்துக் கூறினேன். கழகத்தினருக்கும் பொது மக்களுக்கும் அது சம்பந்தமாக நான் இதுவரையில் கூறாததால், இப்போது அதனையும் கூறுகிறேன். இதுபற்றி, முன்பே கூறினாலோ எழுதினாலோ, பொதுக் குழுவினரின் மனதை என் கருத்தைக் கொண்டு நிரப்பிவிடுவதாக இருக்குமாகையால், இதுபற்றி முன்பு எழுதாதிருந்தேன். இந்த ஜனநாயகப் பண்பு, தேவை என்று உணர்கிறேன்.

கம்யூனிஸ்டு நண்பர்கள், தோழர்கள், A. K. கோபாலன், ப. ஜீவானந்தம் ஆகியோர், என்னிடம், பொதுத் தேர்தல் பற்றிக் கலந்து பேசினார்கள். காஞ்சிபுரத்திலுள்ள கம்யூனிஸ்டு தோழர் பார்த்தசாரதியும், என்னிடம் பேசினார். திருச்சி கம்யூனிஸ்டு தோழர் கலியாணசுந்தரம், கடிதமூலம் தி. மு. கழகம், கம்யூனிஸ்டுகள் மீது சர்க்கார் தொடுத்த அடக்கு முறைகளைக் கண்டித்தது பற்றி, பாராட்டுதலையும் நன்றியறிதலையும் தெரிவித்தார். இதல்லாமல், பலமாதங்களாகவே, நான் பிரசாரத்துக்குச் செல்லும் ஊர்களிலே உள்ள முக்கியமான கம்யூனிஸ்டு நண்பர்களெல்லாம், பொதுத் தேர்தலைப் பற்றி என்னிடம் கலந்து பேசினர். இது போலவே, தி. மு. க. தோழர்கள் பலரிடமும் ஆங்காங்கு உள்ள கம்யூனிஸ்டுத் தோழர்கள் பொதுத் தேர்தல் பற்றிக் கலந்து பேசிவந்தனர் என்று அறிகிறேன்.

விடுதலை அடைந்ததும், தோழர் A. K. கோபாலன் அவர்களை வரவேற்க, காஞ்சிபுரத்தில் ஒரு பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது. உள்ளூர் கம்யூனிஸ்டு நண்பர்கள் அழைத்திருந்தனர். ஊரிலே அப்போது கம்யூனிஸ்டு கட்சிக்கு 144 இருந்ததால், ஒரு மாடியில் கூட்டம் நடைபெற்றது.

தோழர் A. K. கோபாலனை நான் பாராட்டிப் பேசினேன் — அவர் தி. மு. கழகத்தைப் பாராட்டியதுடன், திராவிடர் கழகம் திராவிட முன்னேற்றக் கழகம் கம்யூனிஸ்டு கட்சி இவைகள் 'ஐக்கிய முன்னணி' அமைத்து காங்கிரசை முறியடிக்கவேண்டும் என்றார். நான் மகிழ்ந்தேன். ஆனால் உடனே ஜனநாயக முறைப்படி இயங்கும் ஒரு கழகத்தினன் என்ற கவனம் வந்ததும், நான்கூறினேன், இதுகுறித்து நாம் கலந்து பேசி ஒரு முடிவு செய்ய வேண்டும், உடனடியாக, ஆம் என்றோ இல்லை என்றோ கூற முடியாது என்பதை எடுத்துக்காட்டியதுடன் நிலைமையைச் சற்று தெளிவுபடுத்தினேன்.

ஆம்லேட் (முட்டை அடை) செய்யவேண்டும் என்னிடம் ஒரு முட்டை இருக்கிறது அது போதாது, உங்களிடம் உள்ள முட்டையைத் தாருங்கள், என்று தோழர் கோபாலன் கேட்கிறார் — அதாவது தேர்தலிலே வெற்றி வேண்டும் அதற்கு எங்கள் கட்சியினர் ஓட்டுமட்டும் போதாது, உங்கள் கழகத்தினரின் ஓட்டும் வேண்டும், என்று கேட்கிறார்—அது தருவதுகூட எளிது, தந்துவிடலாம், அப்போதுகூட அடையில்யாருக்கு எவ்வளவு பங்கு என்று கேள்வி கிளம்பக்கூடும், ஆனால் முட்டை கொடுக்கும்படி கேட்பதோடு, முட்டையிடும் கோழியையே தரும்படி கேட்டால், கழகத்தின் ஆதரவையே கேட்டால், அது நான் தந்துவிடக்கூடியதல்ல, கழகத்தவரின் கருத்தை அறிந்துதான் கூற முடியும், சிலர் இதுபோலக்கூறாமல் கோழியைத் தந்திருக்கிறார்களே என்று நண்பர் கோபாலன்கூறலாம் ஆனால் அது ஒரு சமயம் முட்டையிடாத கோழியாக இருக்கலாம் எனக்குத் தெரியாது—என்று கூறினேன். அவரும், உண்மைதான், நாமெல்லாம் கலந்துபேசிஒருமுடிவு செய்யலாம் என்றார்.

கலந்துபேச நண்பர் ஜீவானந்தம் வந்திருந்தார் —நான்கு தடவைகள் இருக்கலாம். கம்யூனிஸ்டு கட்சிக்கும் நமக்கும் உள்ள, மறக்கமுடியாத தொடர்பாளர், நண்பர், ஜீவானந்தம். அந்த முறையில், அவரும் நானும், தாராளமாகவும், பல விஷயங்களைப்பற்றியும் பேசினோம். தி. மு. கழகத்துக்கு உள்ள பொது மக்கள் தொடர்பைப் பாராட்டினார் —அதன் எதிரிகள் எடுத்து வீசும் சில்லரை மறுப்புரைகளைக் கண்டித்தார்—பொதுவாகவே, தி. மு. கழகத்தின் வளர்ச்சியை வரவேற்றார். இந்த வளர்ச்சியையும், திராவிடர் கழகத்தின் சக்தியையும் கம்யூனிஸ்டு கட்சியின் வலிவையும், மற்றும் முற்போக்காளர் கழகங்களின் வலிவையும் ஒன்று திரட்டி, ஐக்கிய முன்னணி அமைத்து, காங்கிரசை ஒழித்துக்கட்டவேண்டும் என்பதை விளக்கினார். நான் அந்த யோசனை, அடிப்படையில் நியாயமானது தேவையானது என்பதைக் கூறினேன். அவர், இந்தியதுணைக் கண்டத்திலேயும், உலக அரங்கிலேயும், பல இடங்களிலே, ஐக்கிய முன்னணி அமைந்து, வெற்றி கிடைத்ததை எடுத்துக்காட்டினார்.

நண்பர் ஜீவானந்தம் காட்டிய ஆர்வம் என்னை மகிழ்வித்தது. இரு இயக்கங்களுக்கும் இடையே இருந்துவந்த மனக்கிலேசம்ஒழிந்து இந்த நேசப்பான்மை வளருவது நாட்டிலே முற்போக்குக் கருத்து வளருவதன் அறிகுறி என்றுகருதி மகிழ்ந்தேன். பிறகு, ஐக்கிய முன்னணி திட்டத்தின் அமைப்புமுறைகளைப்பற்றி நான் கேட்டேன்.

ஐக்கியமுன்னணி எந்த நோக்கத்துடன்? யாரார் அதிலே இருப்பர்? எவ்வளவு காலம் ஐக்கிய முன்னணி பணியாற்றும்? எந்த வகையில் பணிபுரியும்? என்பதைத் தெளிவாக்கிக் கொண்டால், நான், தி. மு. க. பொதுக் குழுவிலே இதுபற்றி கலந்துபேசி முடிவு செய்யமுடியும் என்பதைக் கூறினேன். தி. மு. கழகம் செய்யப்பட்ட முடிவுகளுக்கு முத்திரை பொறிக்கும் கழகமல்ல, முழுக்க முழுக்க ஜனநாயக உரிமை வேட்கை கொண்டது என்பதை விளக்கினேன். அவர் அந்த நியாயத்தை மதித்தார். மறுமுறை வருவதாகச் சொல்லிப் போனார்.

பிறகு மூன்று முறை இதே விஷயமாக, வளர்ந்துள்ள ஆர்வத்தோடு பேசினார்—ஐக்கிய முன்னணியில், திராவிடர் கழகம் திராவிட முன்னேற்றக் கழகம், கம்யூனிஸ்டு கட்சி, பிரஜாஉரிமைக்கட்சி, முற்போக்கு எழுத்தாளர் சங்கம், ஆகியவைகள் இருக்குமென்றும், இவைகள் கொண்ட ஐக்கியமுன்னணியே, தேர்தலில் யாரார் எங்கெங்கு நிறுத்துவது என்பது பற்றி முடிவு செய்யும், தேர்தல் நிதி திரட்டுவதும் செலவிடுவதும் அதன் பொறுப்பிலே இருக்கும், தேர்தல் பிரசாரமும், முன்னணியிடமே இருக்கும் என்று கூறினார். இவைகள், நான் கேட்ட விளக்கங்கள்—எனவே நானும் திருப்தி அடைந்ததோடு, ஐக்கிய முன்னணியில் சேரும் யூனிட்டுகள், கட்சிகள், ஒன்றை ஒன்று மதித்து, அங்கீகரித்து, கூட்டாக வேலை செய்வதற்கு இசைய வேண்டுமே, இதற்கு திராவிடர்கழகம் இசைகிறதா என்று கேட்டேன். இசையவில்லை—முயற்சிக்கிறேன், என்று கூறினார். முயற்சியின் முடிவு தெரியட்டும், மேற்கொண்டு காரியங்களைத் துவக்கலாம் என்று கூறினேன். திராவிடர் கழகத்தைப் பற்றிய பேச்சை நான் எடுத்தற்குக் காரணமே, ஐக்கிய முன்னணியில் அமருவதற்கு முன்னால், ஒன்றை ஒன்று எப்படிக்கருதி நடத்தும் என்பது தெளிவாகிவிடவேண்டும், அப்போதுதான், வேலை, உருப்படியாக நடைபெற முடியும் என்பதையும் எடுத்துக் கூறினேன்.

பல முயற்சிக்குப் பிறகு, சென்னையில் ஐக்கிய முன்னணி மாநாடு கூடிய அன்று பிற்பகல் சென்னையில் என்னைச் சந்தித்த தோழர் ஜீவானந்தம், ஐக்கிய முன்னணி அமைப்பு பற்றி நான் தி. மு. கழகத்தைக் கலந்துபேசுவதற்கே அவசியம் ஏற்படாத வகையிலே ஒரு உண்மையை வெளியிட்டார். ஐக்கிய முன்னணியிலே தி. மு. க. சேருவது பற்றியே திராவிடர் கழகத்துக்கு விருப்பம் இல்லை, தி. மு. கழகத்தை மதிக்கவோ அங்கீகரிக்கவோ பெரியார் இசையவில்லை, எனினும் நீங்கள் அதைப்பற்றிக் கவனிக்க வேண்டாம், பொதுப் பிரச்சினையைக் கவனிக்க வேண்டும், ஐக்கிய முன்னணியில் நீங்கள் வந்து சேர்ந்து நிலைமையைச் சாதகமாக்கிக் கொள்ளலாம், என்றார். நான், அதுமுடியாது, ஐக்கிய முன்னணியிலே நாம் சேருவது, திராவிடர் கழகத்தின் ஏசலையும் தாங்கிக் கொண்டு சேருவது என்ற நிலைமைக்கு தி. மு. கழகத்திலே ஒருவர்கூட இசையமாட்டார்கள்—நான் ஒருவன்மட்டுமே இந்த அளவுக்கு ஏசலைத் தாங்கிக் கொள்கிறேன்—மற்றவர்கள் இசைய மாட்டார்கள் என்றேன். உண்மைதான் வாலிபத்துடிப்பு இருக்குமல்லவா, என்றார், ஆமாம், ஏறத்தாழ திருத்துறைப் பூண்டி மாநாட்டின்போது (பெரியாரை விட்டு ஜீவா விலகிய சம்பவம்) தங்களுக்கு இருந்த துடிப்பு போல!—என்று கவனப்படுத்திவேன். அவர் நெருக்கடியான நேரம் என்பதை நினைவூட்டினார், நான், நெஞ்சிலே பாரத்துடன் நேசம் சாத்தியமாகாது என்பதை எடுத்துரைத்தேன். பிறகு பொதுக்குழுவில், இதுபற்றி முழுவதும் பேசி ஒரு முடிவு செய்யப்படும் என்பதைக் கூறினேன். விரைவிலே செய்யுங்கள் என்று கூறிவிட்டு, "நான் விடப்போவதில்லை, எத்தனை முறை வேண்டுமானாலும் வந்துவந்து போவேன், கழுத்தைப் பிடித்துத் தள்ளி வரவேண்டாம் என்றாலும், வரத்தான் செய்வேன் இதிலே வெற்றி கண்டாக வேண்டும்" என்று கூறினார், அவருடைய நல்லார்வத்தையும் நேச உணர்ச்சியையும் கண்டு நான் களிப்புற்றேன்.

பொதுக்குழுவிலே நான் இந்த விவரங்களை எடுத்துக்கூறினேன்.

பொதுக்குழுவினர், இந்த விளக்கத்தைக் கேட்டபிறகு, கீழ்க்கண்ட தீர்மானத்தை நிறைவேற்றினர்.

"திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆதரவு கோரியும், ஒத்துழைப்பை நாடியும், கூட்டு முன்னணி அமைக்கும் நோக்குடனும் அணுகிய கம்யூனிஸ்டு கட்சித் தலைவர்களுடன் பொதுச் செயலாளர் நடத்திய பேச்சு வார்த்தைகளையும் கூட்டு முன்னணிக்காகக் கேட்ட நிபந்தனைகளையும் பொதுச் செயலாளர் அறிவிக்கக் கேட்டு, இக்குழு பொதுச் செயலாளரின் கருத்தை அங்கீகரிக்கிறது."

"திராவிட முன்னேற்றக் கழகம், இந்தத் தேர்தலில் கம்யூனிஸ்டுகளையும் காங்கிரசல்லாத, நாணயமுள்ள திறமைசாலிகளான முற்போக்குக் கருத்தினரையும், ஆதரிப்பதென்றும், இந்த ஆதரவு கோரி தலைமை நிலையத்துக்கு அபேட்சகர் மனுக்களை அனுப்பி தலைமை நிலையம் குறிப்பிடும் ஒப்பந்தத்தில், கையொப்பமிட்டு, பொதுச் செயலாளரால் அங்கீகரிக்கப்படும் அபேட்சகர்களை ஆதரிப்பது என்றும், பொதுக்குழு தீர்மானிக்கிறது."

"மாநில மாநாட்டில், தி. மு. கழகத்தின் ஆதரவு பெறும் அபேட்சகர்களின் பட்டியலை, பொதுச் செயலாளர் சமர்ப்பிக்க வேண்டுமென்று பொதுக்குழு தீர்மானிக்கிறது. அதுவரையில், திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் எந்தக் கட்சிக்கோ, தனி நபர்களுக்கோ, பிரசாரம் செய்யவோ, பணியாற்றவோ கூடாது என்று பொதுக்குழு தீர்மானிக்கிறது."

ஒப்பந்த பத்திரம்

"நான் வரும் பொதுத்தேர்தலில் சட்டசபை / பார்லிமெண்ட் உறுப்பினராக........ தொகுதிக்கு கம்யூனிஸ்ட் கட்சி / சுயேச்சைவாதியாக சார்பில் நிற்கிறேன். நான் திராவிட முன்னேற்றக் கழக ஆதரவைக் கோருகிறேன். நான் திராவிடத் தனி அரசு பிரச்சினையை ஆதரிக்கிறேன். சட்டசபையில் / பார்லிமெண்டில் உறுப்பினரானால், சட்டசபையில் / பார்லிமெண்டில் மேற்கண்ட பிரச்சினை சம்பந்தமாகவும், தி. மு. கழகக் கொள்கைக்கு ஆதரவு தேடும் வகையிலும் பணியாற்றி வருவேன். சுரண்டலையும் ஏதேச்சாதிகாரத்தையும் ஒழிக்க, திராவிட முன்னேற்றக் கழகம் வெளியிடும் திட்டங்களுக்கு ஆதரவு கிடைக்கும் விதமாகவும், சட்டசபையில் / பார்லிமெண்டில் பணியாற்றுவதாக உறுதி கூறுகிறேன்."

பொதுத் தேர்தலில் காங்கிரசை முறியடிக்க வேண்டும், என்பது நமது ஆர்வம்.

இதற்காக, கம்யூனிஸ்டு கட்சியுடன்ஐக்கியமுன்னணிஅமைப்பது வெற்றிக்கு வழி கோலும் என்பது என் நம்பிக்கை.

இந்த ஐக்கிய முன்னணி அமைப்புக்கான 'சூழ்நிலை' யைப் பொறுத்தே, அதன் வேலைமுறை இருக்குமாகையால், நான் அந்த சூழ்நிலை நிபந்தனையை வலியுறுத்தினேன்.

அதை நிறைவேற்றுவது இயலவில்லை என்பதை தோழர் ஜீவானந்தம் கூறிவிட்டார்.

எனவே, வேறு வழிதேட வேண்டிய தாயிற்று.

ஒருவரை ஒருவர் விரும்பாத அங்கீகரிக்காத, பல யூனிட்டுகள் ஒரு ஐக்கிய முன்னணியில் சேர்ந்து வெற்றிகாண முடியாது — நிமிடத்துக்கு நிமிடம் சந்தேகமும், சம்பவத்துக்குச் சம்பவம், பூசலும் கிளம்பி, ஐக்ய முன்னணி ஏறத்தாழ ஐ. நா. சபை போலாகிவிடும், என்பதை உணர்ந்துதான், நான் தோழர் ஜீவாவிடம், 'சூழ்நிலை' நிபந்தனையை அவ்வளவு தூரம் வலியுறுத்தினேன். அது சாத்யமில்லை என்று ஆனவுடன், பொதுக்குழுவோ, நானோ, எங்கள் முயற்சி முடிந்துவிட்டது என்று கூறிவிடவில்லை. அதைவிட எளிதான, கம்யூனிஸ்டு கட்சி மட்டுமே சிந்தித்து முடிவு கட்டவேண்டிய 'நிலைமை' யைத் தந்திருக்கிறோம்.

கம்யூனிஸ்டுக் கட்சிக்கும், (திராவிடர் கழகத்தில் இருந்துவந்த நாட்களிலேயே) எனக்கும் உள்ள நேசம், அனைவரும் அறிந்ததேயாகும். ரயில்வே வேலை நிறுத்த நாட்களிலேயும் சரி கிசான் கிளர்ச்சியின் போதும் சரி, நான், கம்யூனிஸ்டுகளை ஆதரித்து வந்திருக்கிறேன். திராவிட நாடு இதழிலே கம்யூனிஸ்டு வாடை அடிக்கிறது என்று சிலர் கூறக்கேட்டு பெருமை அடைந்திருக்கிறேன். சேலம் சிறையிலே கம்யூனிஸ்டுகள் சுட்டுத் தள்ளப்பட்ட சேதி, நெஞ்சைத் துளைத்ததால், செல்லுமிடமெல்லாம் அது பற்றிக் கண்டிக்கத் தவறினதில்லை—பொதுக்குழு கூட்டத்திலேயும் கூறியதையே இங்கும் கூறுகிறேன், கட்சிகள் என்று எடுத்துக்கொண்டால், கம்யூனிஸ்டு கட்சிக்கே ஆதரவு தருவது என் எண்ணம்.

ஆகவே, மதுரையில் நிறைவேற்றப் பட்ட தீர்மானம், காங்கிரசை முறியடிக்க கம்யூனிஸ்டு கட்சிக்கு, தி. மு. க. வின் அழைப்பு என்றே நான் கூறுகிறேன்.

காங்கிரசை முறியடிக்க வேண்டும் என்பதிலே எவ்வளவு ஆர்வம் இருக்கிறதோ, அதற்கு எள்ளளவும் குறைந்ததல்ல, திராவிடத்தனி அரசு வேண்டும் என்பதிலே உள்ள ஆர்வம்.

காங்கிரசை ஒழிப்பது இடைக் காலப் பிரச்சினை.

திராவிடத் தனி அரசு அமைப்பது, அடிப்படைப் பிரச்சினை.

இடைக்காலப்பிரச்சினைக்காகக் கம்யூனிஸ்டு கட்சிக்கு திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரவு தருவதற்கு முன் வருகிறது, ஆனால், அந்த ஆதரவு, தி. மு. க. வின் அடிப்படைப் பிரச்சினைக்கு ஆக்கம் தருவதாக அமைதல் வேண்டும் என்று உறுதியாக எண்ணுகிறது.

எனவேதான், திராவிடத் தனி அரசு கோரிக்கையை ஏற்றுக்கொள்வதாகவும், சபையில் இது குறித்து தி. மு. க. வுக்கு ஆதரவு தேடும் வகையில் பணியாற்றுவதாகவும், ஒரு வாக்குறுதி, ஒப்பந்தம், ஏற்படவேண்டும்' என்று தீர்மானம் வலியுறுத்துகிறது.

கம்யூனிஸ்டு கட்சியினர், எல்லா இடங்களுக்கும் போட்டியிடவில்லை எனவே, பல இடங்களில்சுயேச்சை வாதிகள் நிற்கின்றனர்—கம்யூனிஸ்டுகள் போட்டியிடாத இடங்களில் உள்ள சுயேச்சை வாதிகளில், காங்கிரசல்லாத நாணயவான்களுக்கு, தி.மு.க. ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டால், ஆதரவு அளிக்கப்படும் என்பது தீர்மானத்தில் குறிக்கப் பட்டிருக்கிறது.

கம்யூனிஸ்டு கட்சியினர், திராவிடத்தனி அரசுப்பிரச்சினை போன்ற இனவாரி மாகாண அமைப்புப்பிரச்சினையைஆதரிப்பதாக, அவர்களின் பொதுக்கூட்டத்தில் பேசப்படுகிறது.

திராவிடத் தனி அரசு கோரிக்கையை ஏற்றுக்கொள்கிறேன்என்ற உறுதிமொழியை, எழுத்து மூலமாகத் தருவது, எந்த வகையிலும் கம்யூனிஸ்டு கட்சிக்கு ஊறு தேடாது தி. மு. கழகத்தினஆதரவு பெறுவதற்கு இது பெரியதோர் விலையுமாகாது.

சட்டசபைகளிலே தி.மு. க.வின் திராவிடத் தனி அரசு கோரிக்கைக்கு ஆதரவு தேடும்படி பணியாற்றுவேன் என்று உறுதிமொழி தருவது, கம்யூனிஸ்டு கட்சிக்கு நிபந்தனை என்ற முறையிலேகூட எடுத்துக்கொள்ள வேண்டாம், கம்யூனிஸ்டு கட்சியும் தி. மு. க.வும், தேர்தலுக்குப் பிறகும் நேசக்கட்சிகளாக நின்று பணியாற்றும் அரியதோர் வாய்ப்பு.

தட்டிக் கழிப்பதற்காகவோ, சுயேச்சைகளைக் கட்டிப் புரள்வதற்கோ, தீட்டப்பட்ட தீர்மானங்களல்ல. கம்யூனிஸ்டு கட்சிக்கும் தி. மு. கழகத்துக்கும் நேர்மையான ஒரு தேர்தல் கூட்டுறவு ஏற்படவேண்டும் என்பதற்காகவே, இந்தத் தீர்மானங்கள். சேலம் சிறையில் பிணமான வாலிபர்களின் பேரால் அழைக்கிறோம், காங்கிரசை முறியடிப்போம் வாரீர், என்று. கட்டுதிட்டமற்ற கூட்டுறவு காட்டாறு! பலன் இராது. நேர்மையான கூட்டுறவு நேசத்தில்முடியும், உருவான பலன் கிடைக்கும்.

எந்தக் கழகம் பொதுமக்களின் தொடர்பையும் ஆதரவையும் பெருவாரியான அளவுக்குப் பெற்றிருக்கிறதோ, எந்தக் கழகத்துக்கு, முறைப்படி பணியாற்றும் முகாம்கள் நாடெங்கும் உள்ளனவோ எந்தக் கழகம் தானே தேர்தலில் ஈடுபட்டால், வெற்றிபெற முடியும் என்று மாற்றாரும் கூறுவரோ, அந்தக் கழகம், தி. மு. கழகம், தன் நேசக்கரத்தை நீட்டுகிறது, நேர்மையை விரும்புகிறது—கம்யூனிஸ்டுகளைக் கனிவுடன் அழைக்கிறது, காங்கிரசை முறியடிக்க, இதுதான் பொன்னான சந்தர்ப்பம், இழந்து விடாதீர்கள் என்று கூறிக் கொள்கிறது.

திராவிடர் கழகத்தின் வேண்டுகோளுக்காக வேண்டி, சிலகுறிப்பிட்ட இடங்களில் கம்யூனிஸ்டு அபேட்சகர்களை நிறுத்தப் போவதில்லை என்று தோழர் ஜீவானந்தம் என்னிடம் கூறினார். தேர்தலில் காங்கிரசை முறியடிப்பதற்காக இந்த ஏற்பாடு தேவைப் பட்டிருக்கக்கூடும். அது நியாயமா அல்லவாஎன்பதல்ல நான் கேட்பது. தி. மு. க. கூறும் நிபந்தனை, ஒப்பந்தம் உறுதிமொழிச் சீட்டு,இந்தஏற்பாடுகளைவிடக்கடினமானதல்ல, கம்யூனிஸ்டு கட்சிக்கு ஊறுதேடுவதுமாகாது. எனவே கம்யூனிஸ்டுகட்சி, உண்மையான மனமாற்றத்தை நாட்டுக்கு விளக்கவும், ஆயிரமாயிரம் திராவிடர்களின் இதயம் களிக்கவும், 'காங்கிரஸ் பாசிஸ்டுகள் பீதியடையவும், உடனடியாக, தி. மு. க. உறுதிமொழிச் சீட்டிலே கையொப்பமிட்டு, அதன் மூலம் காங்கிரசாட்சியின் மரண ஓலையில் கையொப்பமிடக் கோருகிறேன்.

இணையில்லா வேகத்துடன், எதிர்ப்புகள் பலவற்றைச் சமாளித்து, யாரும் கண்டு பாராட்டக் கூடிய வகையிலே வளர்ந்துள்ள ஒரு கழகத்தை, நிபந்தனையின்றி அடிப்படைப் பிரச்சினை பற்றி பாதுகாப்பு இல்லாமல், வேறொ கட்சியின் பின்னேடும் பணிபுரிய சொல்வதற்கு யார் இசைவர்? நா கள் பெற்ற ஆதரவும், திரட்டிய ச தியும், எங்கள் கழகத்துக்கு பயன்படா விட்டாலும், நேச கட்சியான கம்யூனிஸ்டு கட்சிக்கு பயன் படட்டும்—மகிழ்ச்சி—ஆனல் அதற்கு ஒரு வரைமுறை, கட் திட்டம், உறுதி ஒப்பந்தம், எத வுமே தேவையில்லையா! கம்யூனிஸ் கள், ஒரு கட்சியை நடத்திச் செல் வர்கள்—எனவே ஒரு கட்சியி கண்ணியம் காப்பாற்றப்பட வேண் டும் என்பதிலே, அந்தக் கட்சிக்கா கண்ணீரும் செந்நீரு சிந்தினவர்கள். இத்தகைய சமய தில் எண்ணிப் பாராமல் ஒருமுடி எடுக்க முடியுமா என்பதை என் ணிப்பார்க்க வேண்டுகிறோம்.

கம்யூனிஸ்டுகள் யோசிப்பதற் அவகாசம் இருக்கவேண்டும் — க யூனிஸ்டுகள் நிற்காத இடங்களி நமது ஆதரவு கோரும் சுயேச்ச வாதிகளைப்பற்றி முடிவுசெய்ய நம கும் அவகாசம் வேண்டும். எனவே தான், மாநில மாநாட்டுக்குள் இந் ஆரம்ப காரியத்தை முடித்து கொண்டு, மாநில மாநாட்டி தி. மு. கழக ஆதரவு பெறும் ப டியலை வெளியிட எண்ணியு ளேன். அந்தப் பட்டியலில், கம்யூ னிஸ்டு கட்சித் தோழர்களின் பெ ரையே பெரிதும்காண விரும்பு றேன். தி. மு. கழகத்தின் நி தெளிவாகிவிட்டது — இனி கம்யூ னிஸ்டு கட்சியிடமிருந்து நேச கரத்தை எதிர்பார்க்கிறோம்.

—அண்ணாதுரை

மாநில மாநாட்டு தொண்டர்படை அமைப்ப

டிசம்பர் 13, 14, 15, 16 ஆகி நாட்களில் சென்னையில் நடைபெ இருக்கும் தி. மு. க. மாநில மாநா டின் தொண்டர்களாக காஞ்சிபுர தில் சேர்ந்துள்ளவர்கள் இ தொடர்ந்து பயிற்சியளிக்கப்படுவ சென்னையில் இனி சேர விரும் வோரும், இதுவரை எழுதியுள் தோழர்களும் 25—11—5 ஞாயிறு காலை 9-மணிக்கு சென்ன பிரைட்டன் டாக்கீஸுக்கு எதி ளுள்ள கழகத் தலைமை நிலையத்தி வந்து பதிவு செய்து கொள்ளுமா வேண்டுகிறோம்.

கே. எம். கண்ணபிரான்,
காஞ்சி. மார்க்,
தொண்டர்படைத் தலைவர்கள்.

கொள்கை முரசு ஒலிக்கிறது

ஆங்கிலத்தில் நமது கொள்கை விளக்கம் பற்றிய முதலேடு.

*

மாற்றார் மன இருள் போக்கி, ம விளக்கம் தரும் அரிய நூல்

*

சிறந்த கருவூலம்.

*

சிந்தனைப் பெட்டகம்.

*

A PLEA
for
UNDERSTANDING

தீட்டியது:
எஸ். வேதரத்னம், எம். ஏ.

விலை ரூ. 0—8—0

விற்பனையாளர்களுக்கு 20% கழிவு
வான்காட் பப்ளிஷிங் ஹவுஸ் :
திராவிடநாடு நிலையம், காஞ்சிபுரம்.

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi St., Kancheepuram.